இறந்துவிடுகின்றன. அவைகளைத் தடுப்பதற்கு உடனடியாக ஒரு கோழி நோய் தடுப்பு ஆராய்ச்சி நிலையத்தை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சேலம் மாவட்டம் நாமக்கல்லில் ஒரு கோழி நோய் ஆராய்ச்சி நிலையம் செயல்பட்டு வருகின்றது. ஒரு மையத்தைப் புதியதாக ஆரம்பிக்க வேண்டுமென்றால் அதிகமான செலவு ஏற்படும். நாமக்கல்லுக்கு அருகாமையிலேயே ராசிபுரம் இருக்கின்ற காரணத்தினால் அந்த நாமக்கல்லில் இருக்கின்ற கோழி நோய் ஆராய்ச்சி நிலையத்தின் மூலமாக அந்த பண்ணையாளர்கள் பயனடையலாம் என தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலூரில் கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் அலுவலகம்

*6547—திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம், மேலூரில் முன்பு இயங்கி வந்த கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் அலுவலகம் மீண்டும் அமைக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. க. வெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மேலூர் தொகுதியில் சேத்திப்பட்டியிலே ஒரு தீவிர கால்நடை அபிவிருத்தி செயற்கை உறை கருவூட்டு விற்பனை நிலையம் கடந்த 20 ஆண்டுகளாக இருந்தது. இப்போது அது காலாவதியாகிவிட்டது என்று அரசாங்கம் அறிவித்திருக்கிறது என்பதை கவனத்திற்குக் கொண்டுவருவதோடு, இதை அரசு அறியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை வினா தொடர்புடையதாக இல்லாத காரணத்தினால் தனி வினா எழுப்ப வேண்டுகிறேன்.

[1990 ஏப்ரல் 10

திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஐ. ஆர். டி.பி. திட்டத்தின் கீழ் அதிகமான கால்நடைகள் அங்கே வழங்கப்பட்டிருக்கின்ற வேளையிலே, இந்த செயற்கை உறை கருவூட்டு விற்பனை நிலையத்தை—மருத்துவ அலுவலகத்தை திறக்க அரசு கூடிய விரைவில் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினா தொடர்புடையதாக இல்லாத காரணத்தினால் அதற்கு தக்க பதிலளிக்க இயலாத சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, தனியாக வினா எழுப்பினால் அதற்குத் தகுந்த பதிலளிக்க இயலும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறுகிய கால வினா எண் 9445 மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்பெறுகிறது.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) தமிழ்நாட்டு மீனவர்கள் விடுதலைப் புலிகளால் இலங்கைக்கு கடத்தப்பட்டுள்ளது தொடர்பான செய்திகள் பற்றி அரசுக்குக் கிடைத்துள்ள விவரங்கள் குறித்து

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு இலங்கைப் பிரச்சினையில் மீனவர்கள் பிரச்சினை எழுப்பப்பட்டிருக்கிறது. இதை மாண்புமிகு அமைச்சரவர்கள் பார்த்து விட்டு வந்திருக்கிறார்கள். அது சம்பந்தமாக அவர்கள் பார்த்து விட்டு வந்ததற்குப் பின்னால் அங்கே இருக்கின்ற நிலைமையையும், அதை மாற்றுவதற்கு அரசாங்கம் எடுத்திருக்கிற நடவடிக்கை என்ன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

அடுத்து பொறியியல் கல்லூரியில் வேலை நிறுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. . (குறுக்கீடு)